## 8.3 திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

விடையளி :

Question 1.
திருநெல்வேலி பற்றிக் குறிப்பு எழுதுக.
Answer:
(i) திருநெல்வேலி தமிழகத்தின் பழமையான நகரங்களுள் ஒன்று.
(ii) பழந்தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆண்டு வந்தனர்.
(iii) அவர்களுள் பாண்டியர்களின் தலைநகரமாக விளங்கியது மதுரை.
(iv) அவர்களது இரண்டாவது தலைநகரமாகத் திருநெல்வேலி விளங்கியது.

Question 2.
திருநெல்வேலியைப் பற்றி திருஞானசம்பந்தர் பாடியவற்றை எழுதுக.
Answer:
(i) ‘திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி ’ ‘எனத் திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியுள்ளார்.
(ii) திருநெல்வேலியில் திங்கள் தோறும் திருவிழா நடைபெறும் என்பதை,
“திங்கள் நாள் விழா மல்கு திருநெல் வேலியுறை செல்வர் தாமே” என்று பாடியுள்ளார்.

Question 3.
குற்றாலமலையின் வளத்தைப் பாடியவர் யார்? என்னவென்று பாடியுள்ளார்?
Answer:
(i) குற்றால மலையின் வளத்தைப் பாடியவர் திரிகூட இராசப்பக் கவிராயர்.
(ii) "வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்" என்று பாடியுள்ளார்.

Question 4.
திருநெல்வேலி மாவட்டத்தில் கோட்டைகள் பல இருந்தமைக்குச் சான்றாக விளங்கிய ஊர்கள் யாவை?
Answer:
(i) பாளையங்கோட்டை
(ii) உக்கிரன்கோட்டை
(iii) செங்கோட்டை.

Question 5.
பண்டைய வரலாற்றை நினைவூட்டும் திருநெல்வேலி மாவட்ட ஊர்கள் யாவை?
Answer:
(i) சேரன்மாதேவி
(ii) கங்கைகொண்டான்
(iii) திருமலையப்புரம்
{iv) வீரபாண்டியப் பட்டினம்
(V) குலசேகரன்பட்டினம்.